ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1770/3 - 2012 අගෝස්තු මස 06 වැනි සඳුදා - 2012.08.06
1770/3 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் பாணந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

பாணந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, கட்சி உறுப்புரிமை இல்லாதொழிந்ததன் காரணமாக, வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

எச். ஜகத் புஷ்ப குமார பெரேரா என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் பாணந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ(2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. மொரட்டுவகே அஜித் குமார சிறிசேன என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும்;

இப்போது பாணந்துறை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஹென்னெதிகே ரஸிக பிரியங்க பீரிஸ் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. மொரட்டுவகே அஜித் குமார சிறிசேன என்பவர் பாணந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ரஸிக பீரிஸ் ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
பாணந்துறை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
களுத்துறை.
2012, ஓகத்து 02.

08 – 596

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் தணமல்விலை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

ஐந்து வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை காரணமாக உறுப்பினரொருவரின் பதவி, வகியாதொழிந்தமையால் தணமல்விலை பிரதேச சபையில் வெற்றிடமொன்று எழுந்துள்ளதாதலால்;

கம்கானம் விதாரணகே சந்திரசேகர என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் தணமல்விலை பிரதேச சபையின் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ(2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர், குறிப்பிட்ட காலத்தில் தனது முடிவைத் தெரிவிக்காததாலும்;

இப்போது தணமல்விலை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சுரங்க அம்பகஹதென்ன ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, 2011, மாச்சு மாதம் 17 ஆந் திகதி தணமல்விலை பிரதேச சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி உறுப்பினருக்கு அடுத்ததாக அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள திரு. குமாரசிங்ஹ வன்னிஆரச்சிகே சுசன்த ரஞ்ஜித் என்பவர், அவ்வெற்றிடம் ஏற்பட்ட தணமல்விலை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

சுரங்க அம்பகஹதென்ன ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
தணமல்விலை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மொணராகலை.
2012, யூலை 27.

08 - 594

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் துணைத் தவிசாளர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

அனுமதிபெறாது மூன்றுமாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளியாமை காரணமாக ஊர்காவற்றுறை பிரதேச சபையின் துணைத் தவிசாளர் ஒருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், பரமலிங்கம் அருள்கரன் எனும் துணைத் தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் துணைத்தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. மனுயேல் பெனாண்டோ பெலிக்ஸ் அல்பேட் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்,

இப்போது ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பொன்னுத்துரை குகநாதன் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. மனுயேல் பெனாண்டோ பெலிக்ஸ் அல்பேட் என்பவர், ஊர்காவற்றுறை பிரதேச சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

பொ. குகநாதன் ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2012, யூலை 27.

08 - 597/1

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உறுப்பிளரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

அனுமதிபெறாது மூன்றுமாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளியாமை காரணமாக ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

பரமலிங்கம் அருள்கரன் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராக த் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ், தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர்குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ(2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. மரியதாஸ் யூட்ஸ் பிறின்ரன் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும்,

இப்போது ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பொன்னுத்துரை குகநாதன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. மரியதாஸ் யூட்ஸ் பிறின்ரன் என்பவர், ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

பொ. குகநாதன் ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2012, யூலை 27.

08 - 597/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.